කාන්තාව සහ මාධ්‍ය සාමූහිකය
பெண்கள் மற்றும் ஊடகக் கூட்டமைப்பு
Women and Media Collective
Established 1984

தேர்தல் சட்டங்கள் மற்றும் தேர்தல் முறைமை தொடர்பில் பொருத்தமான சீர்திருத்தங்களை அடையாளம் காண்பதற்கும், அவசியமான சட்டத் திருத்தங்களைப் பரிந்துரைப்பதற்குமென நியமிக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக் குழுவினால்

# 2021.10.11 ஆந்தேதி பாராளுமன்றத்தின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்ட அறிக்கைக்கான பதில்

மேற்குறிப்பிடப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக் குழுவானது (PSC), மாகாண சபைத் தேர்தல்களை விரைவாக நடாத்துவதற்கு அவசியமான சட்டத் திருத்தங்களை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளது என்ற விடயம் எமது கவனத்துக்கு வந்துள்ளது. மாகாண சபைத் தேர்தல்கள் பழைய தேர்தல் முறைமையின்கீழ் நடாத்தப்படலாம் என பாராளுமன்றத்தின் இணையத்தளம் தெரிவிக்கின்றது.

பழைய தேர்தல் முறைமையில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதற்கான விசேட ஏற்பாடு எதுவுமில்லை. எவ்வாறாயினும், ஏதேனும் சட்டத் திருத்தச் செயன்முறையானது மாகாண அரசாங்க மட்டத்தில் பாரதூரமாகக் காணப்படுகின்ற பெண்களின் குறைந்தளவு பிரதிநிதித்துவத்துக்கு பரிகாரமளிப்பதாக இருக்குமென நாம் நம்புகின்றோம்.

பழைய தேர்தல் முறைமையின்கீழ் மாகாண சபைகளில் பெண்களின் பிரதிநிதித்துவம் அதிகரிக்கப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக நாம் பின்வரும் சட்டத் திருத்தத்தை முன்மொழிகின்றோம். இத்திருத்தமானது 1988ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க, மாகாண சபை தேர்தல்கள் சட்டத்தின் 13(1)ஆம் பிரிவின்கீழ் கூட்டிணைக்கப்படுதல் வேண்டும்:

*மாகாண சபையொன்றுக்கு நிருவாக மாவட்டமொன்றிலிருந்து உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் நோக்கத்துக்காக ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி அல்லது (இதனகத்துப்பின்னர் "சுயேச்சைக் குழு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) சுயேச்சை வேட்பாளர்களாகப் போட்டியிடுகின்ற ஆட்களின் ஏதேனும் குழு, அந்த நிருவாக மாவட்டத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கையுடன் மூன்றைக் கூட்டிவருகின்ற எண்ணிக்கைக்குச் சமமானவாறான அத்தகைய எண்ணிக்கையிலான வேட்பாளர்களின் பெயர்களை எடுத்துக்கூறுகின்ற பெயர்நியமனப் பத்திரமொன்றைச் சமர்ப்பிக்கலாம். அத்தகைய பெயர்நியமனப் பத்திரமானது பொருளளவில் இச்சட்டத்துக்கான முதலாம் அட்டவணையில் தரப்பட்ட படிவத்தில் இருத்தல் வேண்டும்.*

56/1, සරසවි මාවත, කාසල් වීදිය, කොළඹ 8, ශ්‍රී ලංකාව
சரசவி லேன், காசல் வீதி, கொழும்பு 8, இலங்கை.
Sarasavi Lane, Castle Street, Colombo 8, Sri Lanka

Telephone: +94-11-2690192, 5632045, 5635900, 5635800, 2690201, Fax: +94-11-2690192, 2690201, Email: wmcsrilanka@gmail.com
www.womenandmedia.org facebook.com/womenandmediacollective twitter.com/womenandmedia

Registration No. GA 2476

***ஆயின், அத்தகைய பட்டியல்களைச் சமர்ப்பிப்பதில் அரசியல் கட்சி ஒவ்வொன்றும் அல்லது சுயேச்சைக் குழு ஒவ்வொன்றும், நியமிக்கப்பட வேண்டிய வேட்பாளர்களின் மொத்த எண்ணிக்கையின் இருபத்தைந்து சதவீதத்துக்குக் குறையாதோர் பெண் வேட்பாளர்களாக இருத்தல் வேண்டும் என்பதை உறுதிப்படுத்துதல் வேண்டும்.***

இந்த சமர்ப்பணமானது கடந்த 25 ஆண்டுகளாக தேர்தல் சீர்திருத்தச் செயன்முறைகளில் ஈடுபட்டு வருகின்ற பெண்கள் அமைப்புக்களினால் நடாத்தப்பட்ட ஆலோசனைக் கலந்துரையாடல்களை அடிப்படையாகக் கொண்டதும் பின்வருவோரினால் ஒப்புறுதிப்படுத்தப்பட்டதுமாகும்:

குமுதினி சாமுவேல், பெண்கள் மற்றும் ஊடகக் கூட்டமைப்பு
சுமிகா பெரேரா, பெண்கள் வள நிலையம், குருணாகல மாவட்டம்
சந்திரா ஜயசிங்க, பெண்கள் அபிவிருத்தி நிலையம், பதுளை மாவட்டம்
பொன்னையா லோகேஸ்வரி, பெண்களின் ஒருமைப்பாட்டுக்கான முன்னணி, கண்டி மாவட்டம்
சிறியானி பதிரகே, கிராமியப் பெண்களின் முன்னணி, காலி மாவட்டம்; அத்துடன்
மைத்ரேயி இராஜசிங்கம், விழுது, வடக்கு மற்றும் கிழக்கிலுள்ள மாவட்டங்கள்

**பிரதி:**

1. கௌரவ அமைச்சர். தினேஷ் குணவர்த்தன - தேர்தல் சட்டங்கள் மற்றும் தேர்தல் முறைமை தொடர்பில் பொருத்தமான சீர்திருத்தங்களை அடையாளம் காண்பதற்கும், அவசியமான சட்டத் திருத்தங்களைப் பரிந்துரைப்பதற்குமென நியமிக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் தவிசாளர்.
2. உறுப்பினர்கள் - தேர்தல் சட்டங்கள் மற்றும் தேர்தல் முறைமை தொடர்பில் பொருத்தமான சீர்திருத்தங்களை அடையாளம் காண்பதற்கும், அவசியமான சட்டத் திருத்தங்களைப் பரிந்துரைப்பதற்குமென நியமிக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக் குழு.
3. கௌரவ அமைச்சர். ஜனக பண்டார தென்னக்கோன் - அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்.
4. கட்சித் தலைவர்கள்
5. கட்சிச் செயலாளர்கள்